Faculty of Islamic Studies and Arabic Language
South Eastern University of Sri Lanka

# Second International Symposium - 2015

# PROCEEDINGS

Published By

Faculty of Islamic Studies and Arabic Language
South Eastern University of Sri Lanka
University Park
Oluvil
Sri Lanka

**Faculty of Islamic Studies & Arabic Language**
**South Eastern University of Sri Lanka**
**University Park**
**Oluvil # 32360**
**Sri Lanka.**

**Phone:** +94672255127
**Fax:** +94672255127
**www.seu.ac.lk/fia**

**ISBN: 978 – 955 – 627 – 061 – 7**

**Copyright:**
Faculty of Faculty of Islamic Studies & Arabic Language, South Eastern University of Sri Lanka

**Disclaimer:**
*All rights reserved. No part of this proceedings may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without written permission from the authors, except for the inclusion of brief quotations in a review. The material in this publication has been supplied by the authors, and only minor copy editing, if relevant, has been done by the FIA, SEUSL. The views expressed remind the responsibility of the named authors and do not necessarily reflect those of the FIA, SEUSL.*

**Chief Editor:**
Mr. MSM. Jalaldeen

**Co – Editors:**
Mr. SMM. Mazahir
Mr. MHA. Munas
Dr. MIM. Jazeel
Mr. ABM. Aliyar

**Editorial Board:**
Mr. AM. Razick
Mr. MHM. Nairoos

**Compiled By:**
Mr. MIM. Irfan
Mr. SI. Nimsith
Mr. FHA. Shibly

**Cover Designed & Layout:**
Mr. SI. Nimsith & Mr. MIM. Irfan

04th March 2015

**Printed By:**
New Rich offset Printers, Akkaraippattu
0779900997

# செப்பேடுகள் காட்டும் இந்து - இஸ்லாமிய பண்பாடு சார்ந்த உறவுகள் - தமிழகத்தினைச் சிறப்பாகக் கொண்ட ஆய்வு

**Dr. K. Arunthavarajah**
Department of History, University of Jaffna
(arunn.msu@gmail.com)

*ஆய்வுச் சுருக்கம்*

*வரலாற்று ஆராய்ச்சியில் செப்பேடுகள் பிரதான பங்கினை வகிக்கின்றன. அதாவது வரலாற்றினை முழுமையாகத் தெரிந்துகொள்வதற்கு இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், அறிக்கைகள், ஆவணங்கள், வெளிநாட்டார்களது குறிப்புக்கள் போன்றவற்றுடன் செப்பேடுகளும் பிரதான பங்கினை வகிக்கின்றன. இவை அனைத்தையும் சான்றாக வைத்தே ஒரு பிரதேசத்தினது சரியான, முழுமையான வரலாறு எழுதப்படல் வேண்டும். அந்தவகையில் தமிழகத்தின் வரலாற்றினைத் தெரிந்துகொள்வதில் செப்பேடுகள் பிரதான இடத்தினை வகிக்கின்றன என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. இத்தகைய செப்பேடுகள் தமிழகத்தில் வாழ்ந்த இஸ்லாமியர்களதும் இந்துக்களதும் உறவின் பிரதிபலிப்புக்களாகவும் உள்ளன. இவை அக்காலப்பகுதியில் வாழ்ந்தவந்த இவ்விரு மதத்தவர்களதும் செயற்பாடுகள், உரிமைகள், வரலாற்றில் அவர்களது பங்களிப்புக்கள் மற்றும் அவர்களுக்கிடையிலான இணக்கமான உறவுகள் போன்றவற்றினைத் தெளிவுபடுத்துகின்றன. இப்பின்னணியில் தமிழக வரலாற்றின் முழுமையினைப் பூர்த்தி செய்வதில் இவ்விரு இனத்தவர்களாலும் காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்ட செப்பேடுகளின் பங்கும் குறிப்பிடத்தக்கவகையில் அமைந்துள்ளன.*

*பிரதான சொற்பதங்கள்: செப்பேடுகள், பண்பாட்டு உறவுகள், வரலாற்று முக்கியத்துவம், மதநல்லிணக்கம்*

**ஆய்வு அறிமுகம்**

ஒரு சமுதாயத்திலுள்ள மக்கள் தங்களது வாழ்க்கையினை நடாத்தும் முறையிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வாழ்வியல் நெறியே பண்பாடாகும். மனிதனுடன் மட்டுமே தொடர்புள்ள இத்தகைய பண்பாடு எனப்பட்ட வார்த்தைப் பிரயோகமானது 1936 இன் பின்னராகவே தமிழ்மொழியில் புழக்கத்திற்கு வந்துள்ள(க.அருந்தவராஜா,2011). பண்பாடும் சமுதாயமும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டவகையிலேதான் காணப்படுகின்றன. அந்தவகையில் தமிழகத்தில் வாழ்ந்த இந்து மற்றும் இஸ்லாமிய சமுதாயத்தினரிடையிலே காணப்பட்ட சிறப்பான பண்பாட்டு அடையாளங்கள் பல அவர்களுக்கிடையிலான உறவின் விம்பங்களாகவும் அவர்களைத் தனித்துவமான வகையில் இனங்காட்ட உதவுகின்ற வகையிலும் சிறப்பிடம் பெறுகின்றன. இத்தகைய அடையாளங்களை ஆதாரப்படுத்துகின்ற மூலங்களிலொன்றாகச் செப்பேடுகள் திகழ்கின்றன. தமிழக மண்ணில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களுடன் ஒப்பிடுகின்றபோது அங்கு வாழ்ந்து வருகின்ற இஸ்லாமியர்களது பாரம்பரியப் பயணம் குறைவாயினும் தமிழக வரலாற்றுக்கு அவர்கள் செய்த பங்கினைக் குறைத்து மதிப்பிட முடியாது. இஸ்லாமியர்கள் தங்களது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து அங்கே பணியாற்றி வந்துள்ளனர் இவர்கள் மதத்தினால் சாதிப்பிரிவுகளினால் இந்துக்களிலிருந்து வேறுபட்டிருந்தாலும்கூட இனத்தால் தமிழர்கள் என்ற உயரிய தத்துவத்தில் அடங்கியது இஸ்லாமிய மார்க்கம்(மனோ,இளங்கோ,2011).

மத வேறுபாடுகளையும் கடந்த இந்து - இஸ்லாமிய மக்கள் தமக்குள்ளும் தாம் சாராத மத நிறுவனங்களுக்கும் வழங்கிய தானங்களையும் கொடைகளையும் உதவிகளையும் செப்பேடுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதற்குப் பல ஆதாரங்கள் செப்பேடுகளில் உள்ளன. கொல்கொண்டாவினுடைய சுல்தான் அபுல்ஹாசன் தனாஷா என்பவன் காஞ்சிபுரம் சங்கராமடத்திற்கு 1677, 1686 ஆகிய காலங்களில் வழங்கிய கொடைகளை பேர்ஷிய மொழியில் எழுதப்பட்ட இரண்டு செப்பேடுகள் குறித்துநிற்கின்றன. மராட்டிய மன்னர் இரண்டாம் ஏகோசி காலத்தில் இந்துக்கடவுள்களாகிய தஞ்சாவூர் கொங்கணேஷ்வரர், ஞானாம்பிகை, அன்னபூரணி ஆகியோர்களுக்கு 1735, 1737 காலங்களில் சோமவாரக்கட்டளை நடாத்துவதற்கு காசு கொடுத்து உதவியவர்களில் பாசிக்கடை மீராசாய்பு ஒருவர். இவ்வாறே மராட்டிய மன்னர் பிரதாப்சிங் காலத்தில் துலுக்கர் லெவ்வை என்பவர் தஞ்சாவூர் கொங்கணேஷ்வரருக்கு கொடை கொடுப்பதற்காக இஸ்லாமிய வணிகர்கள், பாசிப்பேட்டை அகமது மீரான், அரசாங்கண்டு ராவுத்தன், சின்னப்பாப்பிள்ளை

ராவுத்தன் என்போர் பொதியொன்றுக்கு முக்கால் பணம் கொடுத்த செய்திகளைத் தமிழகத்தில் கிடைத்த செப்பேடுகள் தருகின்றன. இந்து மதம்சார்ந்த அநாதைப் பெண்ணொன்றின் உயிரினையும் கற்பினையும் காப்பாற்றும் பொருட்டு பக்கிரிசாயிபு என்ற இஸ்லாமியரொருவர் உயிர்விட்டமை பற்றி 1674 இல் தஞ்சாவூர் நாயக்கமன்னர் விசயரகுநாத நாயக்கர் வழங்கிய செப்பேடு கூறுகின்றது(க.அருந்தவராஜா,2012).

இவை ஒருபுறமிருக்க இந்துக்களாலும் இஸ்லாமியர்களின் பண்பாட்டினை வளர்க்கும் பொருட்டுப் பல்வேறு கொடைகள் தானங்கள் வழங்கப்பட்டதனைச் சமகாலத்தில் வெளியிடப்பட்ட செப்பேடுகளின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. எடுத்துக்காட்டாக அதிராம்பட்டணத்தில் காணப்பட்ட ஹாஜா அலாவுதீன் ஜிஸ்தியா விலியுல்லா சாகிப்தார்கள் என அழைக்கப்பட்ட தர்ஹாவிற்கு தங்சைநாயக்க மன்னர் செல்லப்ப நாயக்க மன்னர் அதிராம்பட்டனம் என்ற கிராமத்தினையே மானியமாக வழங்கியிருந்தார். மேலும் அங்கு கிடைக்கின்ற வருவாய்கள் சகலவற்றினையும் தர்ஹாவிற்கே வழங்க ஏற்பாடுகள் செய்தார். சேது நாட்டில் நெசவு செய்துவந்த இஸ்லாமியர்களுக்கு மட்டும் தறிக்கான வரியினை இரகுநாத சேதுபதி நீக்கியிருந்தார்(மங்களரூபி,சி.,2014). இத்தகைய தானங்கள் கொடைகள் எல்லாம் மதங்களுக்கு அப்பாற்பட்ட புரிந்துணர்வானது இரு சமுதாய மக்களுக்குமிடையிலே நிலவியதனைச் செப்பேடுகள் உரைக்கின்றன. ஒருவரது பண்பாட்டினை மற்றவர் மதித்து நடந்தமையினை இவை வெளிக்காட்டுகின்றன.

அந்தவகையில் இஸ்லாமியர்கள் இந்து மன்னர்களுக்கு வழங்கிய கொடைச்சிறப்புக்கள், சோழ மன்னர்கள் இஸ்லாமியர்களுக்கு வழங்கிய கொடைகள், அநாதைப் பெண்ணின் மானங்காத்த இஸ்லாமியர், இந்து மன்னர்கள் இஸ்லாமியர்களுக்கு வழங்கிய அதிகாரச்சிறப்புக்கள், இந்து மன்னர்கள் தர்ஹாவினைக் கொடுத்தது மட்டுமன்றி அதனைப் பேணுவதற்கு கிராமத்தினையே வழங்கியமை போன்ற அக்கால சிறப்பக்களை செப்பேடுகள் எமக்குத் தருகின்றன.

### ஆய்வுப்பிரதேசம்

செப்பேடுகள் பற்றி ஆராய்வதென்பது பாரிய பரப்பினைக்கொண்டதொரு விடயமாகும். இதன்காரணமாக ஆய்வினது நுட்பத்தினைக் கருத்தில் கொண்டு தென்னிந்தியாவின் பிரதான பகுதிகளிலொன்றாக விளங்கிய தமிழ்நாட்டினை மட்டும் ஆய்வுக்கான பிரதேசமாகக்கொண்டு அப்பிரதேசத்தில் நூறு ஆண்டு காலகட்டத்தினை (கி.பி1650-1750) கால வரையறையாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. (அக்காலத்தமிழகம் என்ற பரப்பிற்குள் தற்காலத்தில் தென்னிந்திய மாநிலங்களாகக் கருதப்படுகின்ற ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களது பெரும்பாலான பகுதிகள் உள்ளடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது).

### ஆய்வுமுறையியல்

தமிழகத்தில் சமகாலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த இவ்விரு சமுதாய மக்களுக்குமிடையிலான நெருக்கமான பண்பாட்டு உறவினை செப்பேடுகளின் வாயிலாக ஆராய்வதனை வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் இவ்வாய்வானது கொண்டுள்ளது. ஆய்வில் முதற்தரச் சான்றுகள், இரண்டாந்தரச்சான்றுகள் என்ற அடிப்படையில் ஆதாரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெருமளவிற்குச் செப்பேடுகள்தான் பிரதான முதற்தர ஆதாரங்களாக ஆய்வில் உள்ளன. பின்னாளில் முதற்தர ஆதாரங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள் மற்றும் நேர்காணல்கள், அவதானிப்புக்கள் போன்றன ஆய்வில் இரண்டாந்தர ஆதாரங்களாக அமைகின்றன.

### ஆய்வினது நோக்கங்கள்

தமிழகத்தில் பிற மாநிலங்களைப் போலன்றி இந்து - இஸ்லாமிய ஒற்றுமையென்பது சிறப்பான வகையில் இன்றுவரை பேணப்பட்டு வருகின்றது. இருப்பினும் ஆய்வில் குறிக்கப்பட்ட காலப்பகுதியில் இத்தகைய ஒற்றுமை காணப்பட்டமைக்கான ஆதாரங்கள் பெருமளவிற்குக் குறைவென்றே கூறலாம். அக்காலப்பகுதியில் இஸ்லாமியர்கள் இந்தியர்களுக்கும் இந்து ஆட்சியாளர்களுக்கும் அன்னியர்களாவே தென்பட்டனர். இருப்பினும் செப்பேடுகளைப் பிரதானமான ஆதாரங்களாகக்கொண்டு அக்காலப்பகுதியில் இவ்விரு இனத்தவர்களுக்குமிடையிலே காணப்பட்ட இணக்கமான உறவினைத் தெரியப்படுத்துவதே ஆய்வினது பிரதான நோக்கமாகும். மேலும் இத்தலைப்பின்கீழ் எவரும் தனித்து விரிவான முறையில் ஆராயாமல் இருப்பதன் குறையினையும் இவ்வாய்வு நிறைவு செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

### இலக்கிய மீளாய்வு

இஸ்லாமியர்கள் மற்றும் தமிழகத்தில் சமகாலத்தில் வாழ்ந்த இந்துக்களுக்கிடையிலே காணப்பட்டுவந்த இறுக்கமான பண்பாட்டு உறவுகள் தொடர்பான ஆய்வுகள் பல வழிகளிலும் பல்வேறு காலகட்டங்களிலும் இந்தியா மற்றம் இலங்கை போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும்கூட தமிழகத்தினை மையமாகக்கொண்டு அதிலும் செப்பேடுகளை அடிப்படையாகக்கொண்டு இவர்களுக்கிடையிலான உறவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மிகவும் குறைவென்றே கூறலாம். இருப்பினும் அமீர் அம்சாபீவி என்பவர் (2009)இல் இஸ்லாமிய வரலாற்றுச் சான்றுகளில் செப்பேடுகளின் சிறப்புக்கள் பற்றி ஆராய்ந்துள்ளார். ஓய்வுபெற்ற தொல்லியலாளரான

கலாநிதி ராஜா முகமட் என்பவர் இவ்விடயமாகப் பல கட்டுரைகளையும் நூல்களையும் தந்துள்ளார். குறிப்பாகத் தமிழ்நாட்டில் இஸ்லாமியர்களது கட்டடக்கலை என்ற இவரது நூல் சிறப்பானது. பேராசிரியர் க. ராஜன், பேராசிரியர் எஸ். சுப்பராஜலு, பேராசிரியர் வி.சண்முகம் போன்றவர்களும் இவ்விடயமாக ஒரு சில ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே அண்மையில் சி.மங்களரூபி(2014) தீவகத்தில் இஸ்லாமியர்களது நடவடிக்கைகள் பற்றி எழுதிய ஆய்வொன்றில் இவ்விடயமாகச் சில குறிப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கத்தக்கது.

## முடிவுரை

கி.பி 7ஆம் நூற்றாண்டின் பின்னதாக இஸ்லாத்தின் தோற்றத்துடன் கீழைத்தேசங்களில் பரவலாகச் செல்வாக்குச் செலுத்த இஸ்லாமியர்கள் ஆரம்பித்திருந்தாலும்கூட அவர்களுக்கும் இந்தியாவிற்குமிடையிலான தொடர்பென்பது அராபியர்களால் அதற்கு முற்பட்ட காலங்களிலிருந்தே வர்த்தக்கத்தின் பின்னணியில் ஏற்பட்டிருந்தமையினைச் சான்றுகள் கூறுகின்றன. வரலாற்று ஆவணங்களில் பிரதான இடத்தினை வகிக்கின்ற செப்பேடுகளின் வாயிலாக தமிழகத்தில் இஸ்லாமிய மக்கள் இந்துக்களையும் இந்துக்கோயில்களையும் இந்துமடங்களையும் அதேபோன்று இந்துக்கள் இஸ்லாமிய மக்களையும் பள்ளிவாசல்களையும் தர்ஹாக்களையும் பெருமையுடன் மதித்து கொடைகளையும் தானங்களையும் வழங்கித் தங்களது மத சகிப்புத்தன்மையினையும் தங்களுக்கிடையிலான உறவுமுறையின் இறுக்கத்தினையும் வெளிக்காட்டியதனை அறியமுடிகின்றது. அந்தவகையில் இத்தகைய செப்பேடுகள் தருகின்ற ஒரே குரல் மதநல்லிணக்கம் மற்றும் உறவின் நெருக்கம் என்பதேயாகும். இந்திய நாட்டுக்குத் தேவைப்படுகின்ற ஒருமைப்பாட்டிற்கான உணர்வுகளை ஆழமான முறையில் இச்செப்பேடுகள் எமக்குத் தருகின்றன. இந்தியாவில் இஸ்லாமியர்கள் குடியேறிய வரலாற்று நிகழ்வுகள், இன்றைய நடைமுறையான பண்பாடுகள், இஸ்லாம் கொள்கைகளில் கொண்டிருக்கின்ற புரிதல்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கு எதிராக செயற்படுகின்ற திட்டங்கள் போன்ற எல்லாவற்றிற்கும் இக்கட்டுரையானது பதில் சொல்லும். மேலும் வருங்காலங்களில் தமிழகத்தில் விரிவான தொல்லியல் ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளின் மூலமாக மறைந்து கிடக்கின்ற மத இணக்கத்தினை வலியுறுத்துகின்ற செப்பேடுகள் மட்டுமன்றி வேறு பல ஆதாரங்களும் கிடைக்குமிடத்து அவை இந்து-இஸ்லாமிய ஒற்றுமைக்கான அடித்தளமாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

## உசாத்துணைகள்


1) அப்துல்ரஹீம்,எம்,எஸ்.,(1979), யாழ்ப்பாண முஸ்லீம் வரலாறும் பண்பாடும், நாமகள் அச்சகம், யாழ்ப்பாணம்.

2) அமீர் அம்சாபீவி,ஓ.மு.கே.,(2009), இசுலாமிய வரலாற்றுச் சான்றுகளில் செப்பேட்டின் சிறப்புக்கள், சென்னை.

3) அருந்தவராஜா,க.,(2012), யாழ்ப்பாண முஸ்லிம்கள், அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.

4) மங்களரூபி,சி.,(2014),இஸ்லாமிய மக்களின் பண்பாடு – தீவகத்தினை மையமாகக்கொண்ட ஆய்வு, யாழ்ப்பாணம்.

5) Raja Mohamed. Islamic Architecture in Tamil Nadu, Chennai.